# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் - 71 ஆடி - புரட்டாதி 2018




இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06

அமுதம் 18 துளி 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து என்பவன் யார் ?

இந்து என்று சொல்லிக்கொள்ள நீங்கள் ஏன் வெட்கப்படுகிறீர்கள்? அது உயர்ந்ததும், புகழ் மிக்கதும் ஆகிய சொத்து அல்லவா? இந்துவின் மனம் தன் சொந்த வழியிலேயே சென்று அற்புதமான நன்மைகளைக் கண்டது. இன்றும் கூட இந்துவின் விவாதத் திறமையும் அவனது மூளையின் மாபெரும் ஆற்றலும் ஈடு இணையற்றதாகவே இருக்கின்றன.

எல்லோருக்கும் தொண்டனாக இருப்பதன் மூலமாகத்தான் ஒரு இந்து தன்னை உயர்த்திக் கொள்வதற்கு வழி தேடுகின்றான். இப்படித்தான் பாமரர்களைக் கைதூக்கி விடுவதற்கு இந்துக்கள் முயற்சி செய்ய வேண்டுமே தவிர வேறு எந்த வெளிநாட்டுச் செல்வாக்கையும் எதிர்பார்த்து அல்ல.

நாம் இப்போது எவ்வளவுதான் இழிவையும் பிற்போக்கையும் அடைந்திருந்தாலும், நமது இந்து மதத்திற்காகச் சரியான உற்சாகத்தோடு நாம் வேலை செய்ய ஆரம்பித்தால் மறுபடியும் மகத்தானவர்களாக ஆகி விடுவோம். அதற்குத் தேவைப்படும் ஆற்றல் நமக்குள் இருந்தே வரவேண்டும். அதாவது ஆச்சாரம் மிக்க இந்துக்களிடமிருந்தே வரவேண்டும்.

இந்து என்ற பெயர் தாங்கிய மனிதன், எந்த நாட்டைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அவன் எந்த மொழி பேசினாலும், அந்தக் கணமே அவன் உங்களுக்கு மிக மிக நெருங்கியவனாகவும், இனியவனாகவும் ஆகிவிட வேண்டும். இந்து என்ற பெயர் தாங்கிய மனிதனுக்கு ஏற்படும் துன்பம், உங்கள் உள்ளத்தை வந்து தாக்கி, உங்கள் மகனே துன்பப்படுவது போன்ற உணர்ச்சியை உங்களுக்கு ஏற்படுத்த வேண்டும். இந்து என்ற பெயரைக் கேட்ட உடன் உங்களுக்குள், சக்தி மின் அலை போன்று பாய வேண்டும். அப்போது தான் - அப்போது மட்டும் தான் - நீங்கள் இந்து ஆவீர்கள்!!!

தொகுப்பு: **சி. அபிராமி**, தொண்டராசிரியை (பழைய மாணவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை



ஓம் ஸர்வ தர்ம ஸ்தாபகஸ்த்வம்
ஸர்வ தர்ம ஸ்வரூபக:
ஆசார்யாணாம் மஹாசார்யோ
ராமக்ருஷ்ணாய தே நம: //

பொருள்: அறத்தை நிலைநாட்டியவரும் எல்லா தர்மங்களின் வடிவினரும் குருவுக்கெல்லாம் குருவும் ஆகிய ஸ்ரீ இராமகிருஷ்ணரே உமக்கு வணக்கம்!

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

பொருள்: குருநாதரின் அழகிய திரு உருவைக் கண்டு வணங்குதல் அறிவுக்கு விளக்கமாகும். குருவின் திருப்பெயரைத் தியானித்தல் அறிவு மேம்பட உதவும். குருவின் அருளுரைகளைக் கேட்பது அறிவை விசாலமடையச் செய்யும். இவை எல்லாவற்றையும் விட, அந்த ஞானாசிரியரின் திருவுருவை நெஞ்சில் நிறுத்தி, அவர் அருளுரைகளை எண்ணியபடியே, நினைவால் தொழுவதும் அறிவுக்கு விளக்கம் ஆகும்.

இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 1 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து | 3 |
| 3. | கவிதை - குருவடி நிழல் | 6 |
| 4. | பாப்பா பாப்பா கதை கேளு - புத்திமான் பலவான் | 7 |
| 5. | விவேகானந்தர் வழியில் நட்பு | 10 |
| 6. | ஆலயங்கள் | 13 |
| 7. | கலியுக கற்பகதரு | 16 |
| 8. | படக் கதை - குணம் நாடி | 18 |
| 9. | அழியாத இந்து தர்மம் - முதலாழ்வார்கள் | 20 |
| 10. | குறள் ஒளி - தியாகத்தின் சிகரம் | 24 |
| 11. | எண்ணங்கள் | 27 |
| 12. | சாதனையாளர் - சிகரம் தொட்ட சபரி வெங்கட் | 29 |
| 13. | உண்மைச் சம்பவம் - வெற்றியின் இரகசியம் | 33 |
| 14. | செய்திகள் | 36 |


**அட்டைப் பக்கங்களில்...**


| | | |
|---|---|---|
| 1. | அட்டைப்படம் | |
| 2. | சுவாமிஜியின் திருமுகம் | ii |
| 3. | உங்கள் சிந்தனைக்கு... | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியர்களிடமிருந்து...

அறநெறி அமுதத்தின் அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய குரு பூர்ணிமா தின நல்வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக. குரு பூர்ணிமா அன்று, சீடர்கள் (மாணவர்கள்) தங்களுக்குக் கல்வி அறிவு புகட்டிய குருவைப் (ஆசிரியரை) போற்றும் முகமாக, குரு வழிபாடு என்னும் குரு பூஜை செய்வது தொன்றுதொட்டு வழக்கமாக இருந்து வருகின்றது. இதனை வியாச பூர்ணிமா என்றும் அழைப்பர்.

சனாதன இந்து தர்மத்தில் குரு என்பவர் கடவுளாகவே போற்றப்படுகின்றார் (ஆச்சார்ய தேவோ பவः). அப்படி ஓர் உன்னதமான ஆன்மீக குருவாக உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டியாக இச்சத்திய யுகத்தில் அவதரித்தவரே பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர். இவரது முதன்மைச் சீடரான சுவாமி விவேகானந்தர் 'வேதங்களுக்கும் அவற்றின் இலட்சியங்களுக்கும் உயிருடன் கூடிய விளக்கத்தை, ஒரு யுகம் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டிய இந்தியச் சமய வாழ்வை, தமது ஒரே வாழ்நாளில் ஸ்ரீ இராமகிருஷ்ணர் வாழ்ந்து காட்டியுள்ளார். இந்த



உடலிலேயே மனிதன் பரிபூரணனாக ஆக முடியும் என்பதை எனது குருநாதரின் திருமுன்னர் உணர்ந்தேன். அந்த உதடுகள் ஒருபோதும் யாரையும் சபிக்கவில்லை, யாரிடமும் குற்றம் காணவில்லை. அந்தக் கண்கள் தீயதைப் பார்க்கும் சக்தியை இழந்துவிட்டன. அவரது மனம் தீயதை நினைக்கும் சக்தியை இழந்துவிட்டது. எங்கும் அவர் நல்லதையே கண்டார். அந்த அற்புதத் தூய்மை, தீவிரத் துறவு - இதுதான் எனது குருநாதர்' என தமது குருநாதரைப் போற்றுகின்றார்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 183 ஆவது ஜெயந்தியானது எமது சமய பாடசாலை மாணவர்களால் கடந்த மார்ச் மாதம் கொண்டாடப்பட்டது. 'எத்தனை மதங்களோ அத்தனை வழிகள், அனைத்து மதங்களும் ஒரே இறைவனிடமே நம்மைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சேர்க்கின்றன" என்ற கருத்தை வலியுறுத்தும் முகமாக இம்முறை எமது அறநெறி அமுதத்தின் அட்டைப் படமானது இராமகிருஷ்ண ஜெயந்தி விழாவின் மேடை அலங்காரத்தைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. உலர்ந்த தேங்காய்த் துருவலை மட்டுமே பயன்படுத்தி இம் மேடை அலங்காரமானது உருவாக்கப்பட்டது.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும், ஒவ்வோர் எண்ணமும் சித்தத்தில் ஒரு பதிவை விட்டுச் செல்கின்றது. இத்தகைய பல பதிவுகள் ஒருங்கிணைந்து பழக்கம் ஆகின்றது. இத்தகைய பழக்கங்களின் தொகுப்பே ஒருவனுடைய குணம் என்று கூறப்படுகின்றது. எனவே ஒருவனுடைய எண்ணங்களின் படியே அவன் நல்லவனாகவோ தீயவனாகவோ உருவெடுக்கின்றான்.



இதையே சுவாமி விவேகானந்தர் தம்முடைய சொற்பொழிவுகளில் மிகவும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் கூறியுள்ளார். சுவாமி விவேகானந்தர், "நாம் எண்ணுகின்ற ஒவ்வோர் எண்ணமும் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் சூட்சுமமாகி, இந்த நுண்ணிய உடலில் ஆற்றல் வடிவமாக உறைகின்றது. சில காலத்திற்குப் பிறகு வெளிவந்து உரிய பலனைக் கொடுக்கின்றது. இந்தப் பலன்கள் மானிட வாழ்வை உருவாக்குகின்றன. இவ்வாறு மனிதன் தனது வாழ்க்கையைத் தானே அமைத்துக் கொள்கின்றான்." என்று கூறுகின்றார்.

மேலும் சுவாமிஜி "ஒருவன் நல்ல நினைவுகளையே நினைத்து, நற்செயல்களையே செய்து வந்தால், இது அவனது நினைப்பும் முயற்சியும் இல்லாமலேயே, அவனை நற்செயல்களில் ஈடுபடத் தூண்டுகின்றன. நல்லது செய்வதிலிருந்து தடுக்க முடியாத மனப்பாங்கு உண்டாகும் அளவிற்கு, ஒருவன் மிக அதிகமாக நல்லதைச் செய்வானானால், மிக அதிகமாக நல்லவற்றையே நினைப்பானானால், தன்னையும் மீறி அவன் தீமை செய்ய முயன்றாலும், அவனது மனப்பாங்குகளின் மொத்தமும் சேர்ந்து அவனைத் தீமை செய்ய விடாமல் தடுத்துவிடும். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக்க முழுக்க நல்ல மனப்பாங்குகளின் ஆதிக்கத்தில் இருக்கின்றான். அந்த நிலையில் ஒரு மனிதனின் நற்பண்பு நிலைபெற்று விட்டது" என்று கூறுகின்றார். அந்த வகையில் **"எண்ணங்கள்"** என்னும் புதிய தொடரானது இவ்விதழிலிருந்து ஆரம்பமாகின்றது.


ஒரு மனிதன் தன் வாழ்வைச் செம்மைப்படுத்த உறுதுணையாக இருக்கும் இவ் அறநெறி அமுதத்தை குரு



வடிவாக விளங்கும் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீசாரதா தேவி மற்றும் சுவாமி விவேகானந்தர் ஆகிய தெய்வத் திருமூவரின் திருப்பாதங்களில் சமர்ப்பித்து, அவர்களது பரிபூரண அருள் அனைவருக்கும் கிடைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

# பிரார்த்தனை ஏன்?

ஆப்ரகாம் லிங்கன் (Abraham Lincoln) அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாயிருந்த காலம். ஒரு நாள் அவர் வழக்கம் போல் தம்முடைய பிரார்த்தனையை முடித்துவிட்டு வெளியே



வந்தார். அவரைப் பார்ப்பதற்காக ஒரு பாதிரியார் காத்திருந்தார். பாதிரியாரைக் கண்டதும் லிங்கன், "எனக்கு வேண்டிய சக்தியும், நிம்மதியும் பிரார்த்தனையில் கிடைத்து விட்ட திருப்தி எனக்கு ஏற்பட்டிருக்கின்றது" என்று கூறினார். அதற்குப் பாதிரியார், "எதற்காகப் பிரார்த்தனை செய்தீர்கள்? கடவுளை எதிரியின் பக்கம் செல்லாமல் நம் பக்கத்திற்கு இழுப்பதற்காகத் தானே பிரார்த்தனை செய்தீர்கள்?" என்று கேட்டார். "கடவுள் என் பக்கம், எதிரியின் பக்கம் என்ற கருத்திற்கேயிடமில்லை. நாம் கடவுளின் பக்கமிருக்க வேண்டும். அதற்குத் தான் பிரார்த்தனை!" என்றார் ஆப்ரகாம் லிங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவடி நிழல்

தன்னிகரில்லா மாசற்ற தேவன்
தன்னகம் கொண்ட தனிப்பெரும் கருணை,
தரணியில் குருவென உருவரப் பெற்று
தவித்திடும் பேர்க்கு தண்ணிழல் தருகுது!

இரவது சூழ்ந்து இடர்தரு வனத்தின்
இருளது நீக்கும் ஒளிதரு சுடராய்,
மடமையில் ஆழ்ந்த மாசுறு மனத்தின்
மருளது போக்கும் மாண்புறு பெரியோய்!

இறவாத ஆனந்த இயல்பினை மறந்து
இடைவிடா ஆசையில் நினைவது இழந்து
இடர்படு மாந்தர் நிலையது தெரிந்து
இறைவழி சேர்த்திடும் குருவரு மருந்து!


இருவிழி குளமென குருவடி அருகில்
இதுவரை இழைத்திட்ட பாவங்கள் தீரும்!
குருவிழி காட்டும் வழியது தெரிகில்
குருவடி நிழலில் இறைபதம் சேரும்!

ஆக்கம்: **ச. துளக்ஷன்** (தன்னார்வத் தொண்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பா பாப்பா கதை கேளு...

முன்னொரு காலத்தில் அழகாபுரி என்று ஒரு நாடு இருந்தது. அந்நாடு மிகவும் செல்வச் செழிப்போடு காணப்பட்டது. ஆனால் வளம் நிறைந்த அந்நாட்டில் ஒரு குறை இருந்தது. அது, அந்நாட்டுக்கு அரசர் என்று யாருமே இருக்கவில்லை. ஏனெனில் அந்நாட்டிற்கு யார் அரசராக வந்தாலும், ஐந்து ஆண்டுகள் மட்டுமே ஆட்சி செய்யலாம். ஐந்தாம் ஆண்டின் முடிவில் அவ் அரசன், அருகிலிருக்கும் காட்டிற்குச் சென்றுவிட வேண்டும். ஆனால் அந்தக் காட்டிலோ பல கொடிய விலங்குகள் வாழ்ந்து வந்தன. அவை மனிதர்களைக் கண்டால் கொன்று தின்று விடும். அதற்குப் பயந்து அழகாபுரியை அரசாள யாருமே முன்வரவில்லை.



## புத்திமான் பலவான்



ஒரு நாள் மகரன் என்ற இளைஞன் அழகாபுரிக்கு வந்தான். அந்நாட்டில் அரசர் என்று யாரும் இல்லாததற்கான காரணத்தை விசாரித்தான். மக்கள் அந்நாட்டின் விசித்திரக் கட்டுப்பாட்டைக் கூறினார்கள். மகரன் ஒரு முடிவுக்கு வந்தவனாய், தான் அந்நாட்டிற்கு அரசன் ஆகத் தீர்மானித்தான். அப்படியே மக்களின் ஆதரவோடு மன்னன் ஆனான்.

மகரன் ஐந்து ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தான். மக்களும் மகிழ்வாகவும் திருப்தியாகவும் வாழ்ந்தார்கள். மன்னன் ஐந்து ஆண்டுகள் முடிந்து காட்டிற்குச் செல்லும் நாள் வந்தது. மக்கள் அனைவரும் மிகவும் கவலையில் ஆழ்ந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை காணாத ஒரு நல்ல மன்னனை இழக்கப் போகின்றோமே என்று ஆதங்கப்பட்டார்கள்.

ஆனால் அரசனோ அமைதியாக தேரில் ஏறி மக்களிடம் விடை பெற்று காடு நோக்கிப் புறப்பட்டான். தேரைச் செலுத்திச் சென்ற தேரோட்டி மன்னனைக் கவனித்தான். கொடிய அக்காட்டிற்குச் செல்கின்றோமே என்ற எந்தக் கவலையும் இன்றி மிகவும் மகிழ்வுடன் அரசன் இருப்பதைப் பார்த்து வியப்படைந்த தேரோட்டி, "மன்னா, தாங்களோ காட்டிற்குச் செல்கின்றீர்கள். அங்கே எப்படியும் மிருகங்கள் உங்களைக் கொன்று விடும். ஆனால் அதைப் பற்றிய எந்தக் கவலையோ பயமோ தங்களிடம் இல்லையே?" என்று கேட்டான்.

அதற்கு மன்னர் "உண்மை தான், ஆனால் நீ நினைப்பது போல் நான் காட்டிற்குச் செல்லவில்லையே!" என்றார். தேரோட்டி குழப்பத்தோடு, "தாங்கள் என்ன கூறுகின்றீர்கள் மன்னா? எனக்கு விளங்கவில்லையே!" என்றான்.

அதற்கு அரசர், "நான் ஆட்சி செய்த இந்த ஐந்து வருடங்களில் ஒரு மாற்றம் செய்ய நினைத்தேன். முதல் ஆண்டில் காட்டிற்கு வேடர்களை அனுப்பினேன். அவர்கள் கொடிய விலங்குகளை எல்லாம் வேட்டையாடிக் கொன்று விட்டார்கள். இரண்டாம் ஆண்டு, ஆயிரம் விவசாயிகளை அனுப்பினேன். அவர்கள் காடுகளைத் திருத்தி உழுது விவசாயம் செய்தார்கள். பின் அங்கேயே தங்கி விட்டார்கள்."




"மூன்றாம் ஆண்டு, கட்டிடக்கலை வல்லுனர்கள் மற்றும் தொழிலாளர்களை அனுப்பினேன். அவர்கள் வீடுகள், அரண்மனைகள், சாலைகள் என அனைத்தையும் நிர்மாணித்து, பின் அங்கேயே வாழ ஆரம்பித்தார்கள். நான்காம் ஆண்டு அரச அதிகாரிகளை அனுப்பி அரச நிர்வாகங்களை எல்லாம் சீரமைத்து தங்கள் குடும்பத்துடன் வாழ வழி செய்தேன். இன்று நான்காயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தங்கள் குடும்பத்தினருடன் அங்கே மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது நான் என் நாட்டிற்குச் செல்கின்றேன். அங்கு நானே மன்னன். இந்த ஐந்து ஆண்டுகள் செய்த ஆட்சி, இனி அங்கும் தொடரும்.



இப்பொழுது கூறு நான் காட்டிற்குச் செல்கின்றேனா இல்லை என் நாட்டிற்குச் செல்கின்றேனா?" என்று பெருமையுடன் கூறிச் சிரித்தார்.

வேந்தன் கூறியதைக் கேட்ட தேரோட்டி ஆச்சரியத்தில் உறைந்தான். மன்னனின் துணிவு, புத்திக்கூர்மை, விடாமுயற்சி அனைத்தையும் கண்டு பிரமித்தான். இப்படி ஒரு மன்னனுக்குத் தேரோட்டுவதே தனக்குப் பெருமை என்று மனதில் எண்ணிக் கொண்டான்.

புதிய நாட்டை நோக்கித் தேர் வேகமாக ஓடியது.

நாம் ஒரு தெளிவான இலக்கைத் தேர்ந்தெடுத்து, அதை அடைவதற்காகத் துணிவுடனும், விடாமுயற்சியோடும், புத்திக்கூர்மையோடும் செயற்பட்டால் நமக்கு வெற்றி நிச்சயம்.

ஆக்கம்: **க. கலைவாணி**, தொண்டராசிரியை (பழைய மாணவி)



**பணக்காரன் இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் பணத்தால் பணிசெய்ய வேண்டும். ஏழையோ இறைவனது திருநாமத்தைத் திரும்பத் திரும்ப ஜபிப்பதன் மூலம் அவனை வழிபடவேண்டும்.**

- தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவாமி விவேகானந்தர் வழியில் நட்பு

பல உறவுகளின் மத்தியிலே வாழும் நாம் "நட்பு" என்கின்ற உயர்ந்த, விலைமதிப்பற்ற உறவினை மேம்படுத்திக் கொள்ளும் வகைகளை, சுவாமி விவேகானந்தரின் வழியில் கண்டு வருகின்றோம். "நன்றி" என்ற மந்திர வார்த்தையினைக் கூறுவதன் மூலம் நட்பினைத் தக்க வைத்துக் கொள்ளும் வழியைச் சென்ற இதழில் (அமுதம் 18, துளி 2) கண்டோம். இன்ப துன்பங்களைப் பகிர்வதன் மூலம் நட்பினைப் பலப்படுத்திக் கொள்வது பற்றி இவ்விதழில் பார்ப்போம்.

## 02. இன்ப துன்பங்களைப் பகிருதல்

"இன்பங்களைப் பகிருவதன் மூலம் அவை பெருகுகின்றன. துன்பங்களைப் பகிருவதன் மூலம் அவை குறைகின்றன" என்ற முதுமொழி கூறுவதை அனைத்து உறவுகளிலும் கடைப்பிடித்து வந்தால் உறவுகள் பலமடையும். இன்ப துன்பங்களைப் பிறருடன் பகிரும் ஒருவரால் பலருடைய நட்பை வெற்றி கொள்ள இயலும். அத்தகையதொரு நபரே சுவாமி விவேகானந்தர்.

மதம் பற்றிய அறியாமை, மூடநம்பிக்கை, தவறான கருத்துக்கள் என்பவற்றை மக்களிடமிருந்து அகற்றும் மகத்தான சேவையினை சுவாமி விவேகானந்தர் புரிந்தார் என்பது நாம் அறிந்ததே. அந்நேரங்களில் ஏற்படும் மனச்சோர்வினைத் தமது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வார். மாறாக, சில சமயங்களில் தமது வெற்றியினால் கிடைக்கும் இன்பத்தையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருடனும் பகிர்ந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தமக்கு ஏற்படும் இன்பம், துன்பம், கோபம், சோர்வு என அனைத்துவித உணர்வுகளையும் தமது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வார். இதன் மூலம் சுவாமி விவேகானந்தர் நண்பர்களுடன் கொண்டிருந்த உறவு மேலும் உறுதியானது. சுவாமி விவேகானந்தரின் வாய்மை, நேர்மை, தைரியம், துணிவு, வீரம், ஆண்மை ஆகியவற்றின் மூலமும் அவரது நண்பர்கள் மேலும் அவர்பால் ஈர்க்கப்பட்டனர்.

சுவாமி விவேகானந்தர் இன்ப துன்பங்களைத் தமது நண்பர்களுடன் பகிர்ந்து கொண்ட சம்பவம் ஒன்று வருமாறு:



சுவாமிஜியின் நண்பர் ஒருவர் மூலம் அறிமுகமாகியவர் திரு. பிரான்சிஸ் லெக்கட். அவர் ஆன்மீக நாட்டம் கொண்டவர். சுவாமிஜியிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர். திரு. பிரான்சிஸ் லெக்கட் மற்றும் அவரது பாரியார் சுவாமி விவேகானந்தரது நெருங்கிய நண்பர்களாவர். இருவரும் எப்பொழுதும் சுவாமிஜிக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவருக்குப் பக்கபலமாக இருந்தனர். "பேலூர் மடம் கட்ட வேண்டும்" என்கின்ற சுவாமி விவேகானந்தரின் கனவினை நனவாக்குவதற்காகப் பல ஆயிரம் டொலர்களை அன்பளிப்பாக அளித்தனர்.

மிகவும் மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு சுவாமிஜி எழுதிய கடிதம்:

"ஒவ்வொரு நாளும் பொறுமையிலும், அதற்கு மேலாக, அனுதாப உணர்ச்சியிலும் நான் பாடம் கற்று வருகின்றேன். மேலான, ஆற்றல் மிக்க ஆங்கிலேய இந்தியர்களிலும் கூட நான் தெய்வீகத்தைக் காணத் தொடங்கி விட்டேன் என்று எனக்குத் தோன்றுகின்றது. சாத்தான் என்று ஒருவன் இருப்பானானால், சாட்சாத் அந்த சாத்தானையும் என்னால் நேசிக்க முடியும் என்ற நிலையை நான் மெல்ல மெல்ல நெருங்கிக் கொண்டிருக்கின்றேன் என்பது எனக்குப் புலப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைச் சுற்றியுள்ள தீமையைக் காண முடியாதவனால் நன்மை செய்ய முடியாது, விதியின்படி தான் எல்லாம் நடக்கும் என்று அவன் முயற்சி எதுவுமின்றிக் கிடப்பான் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால் எனக்கு அப்படித் தோன்றவில்லை. எனது பணியின் ஆற்றல் மிகவும் வளர்ந்து, ஏராளமான அளவிற்குப் பயனளிப்பதுமாகி வருகின்றது. சில நாட்களில் நான் ஒரு விதமான பரவச நிலையிலேயே ஆழ்ந்து விடுகின்றேன். நான் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், ஒவ்வொன்றையும் அன்புடன் அணைத்துக் கொள்ள வேண்டுமென்றும் உணர்கின்றேன். தீமை என்பது வெறும் பிரேமை என்பதை நான் காணவே செய்கின்றேன். அன்பார்ந்த பிரான்சிஸ், நான் இப்போது அத்தகைய மனநிலையில் உள்ளேன். என்மீது நீங்களும், மிசஸ் லெக்கட்டும் கொண்டுள்ள அன்பையும் நேசத்தையும் எண்ணி உண்மையிலேயே ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கிறேன்."

மூலம் : **Winning Friendship** - Sharma
ஆக்கம் : **ஜெ.காயத்திரி,** தொண்டராசிரியை (பழைய மாணவி)



*குகாரச்சாந்தகாரோஹி ருகாரஸ்தேஜ உச்யதே*
*அஜ்ஞானக்ராஸகம் ப்ரஹ்ம குருரேவ ந ஸம்சய:*

பொருள்: 'கு' எனும் எழுத்து இருளைக் குறிக்கும், 'ரு' எனும் எழுத்து ஒளியைக் குறிக்கும் எனக் கூறப்படுகிறது. அஞ்ஞானத்தை விழுங்கும் பிரம்மம் குருவே என்பதில் சந்தேகமில்லை.

-ஸ்ரீ குரு கீதை-


**யஸ்ய தேவே பராபக்திர் யதாதேவே ததா குரௌ |**
**தஸ்யைதே கதிதாஹ்யார்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மன: ||**

பொருள்: எவருக்கு தெய்வத்திடம் பக்தி உள்ளதோ, தெய்வத்திடம் போலவே குருவிடமும் பக்தி உள்ளதோ அந்த மகாத்மாவிற்கு உபநிடதங்களில் கூறப்பட்ட பொருள்கள் தாமாகவே பிரகாசிக்கின்றன.

- சுவேதாசுவர உபநிடதம் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலயங்கள்

கடந்த இதழில் திருக்கோணேஸ்வர்க் கோயிலின் தல மகிமையைப் பற்றியும் பண்டைய வரலாற்றின் சிலகுறிப்புகளையும் பார்த்தோம். இவ்விதழில் அதன் தொடர்ச்சியைப் பார்ப்போம்.

1999ஆம் ஆண்டு ஐந்து தலைகளை உடைய நாக பாம்பொன்று முதன் முதலாக இராவணன் வெட்டுக்கு அருகாமையில் கிழக்குப் பக்கமாகக் காட்சியளித்ததாகவும் அவ்விடத்தில் காவலில் நின்ற படைவீரர் ஒருவரும், சுற்றுலாப் பயணி ஒருவரும் நேரில் அந்தப் பாம்பைக் கண்டார்கள் எனவும் திருகோணேசல வைபவம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.




மேலும் குளக்கோட்டு மன்னனுடைய தந்தை வரராம தேவன் கோணேசர் கோயிலில் திருப்பணி செய்வதற்குரிய திரவியங்களை மலைக்குகைக்குள் வைத்ததாகவும் அந்தத் திரவியங்களுக்கு பாம்புகளும் பூதங்களும் காவலாக இருந்ததாகவும் கோணேஸர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்நாக பாம்பு அம்மலையில் இருந்தே வெளிப்பட்டிருக்கலாம் எனவும் அங்கு அப்பண்டைய பெருங்கோயில் இருந்திருக்கலாம் எனவும் அடியவர்கள் நம்புகின்றனர்.

அதனைத் தொடர்ந்து இவ்வாலயம் கி.பி.1624ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு தினமன்று போர்த்துக்கேயரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அப்பொழுது பக்தர்களும் பூசகர்களும் இறைவனது திருவுருவங்களைக் கவனமாக எடுத்துச் சென்று பல இடங்களிலும் மறைத்து வைத்தனர். அவர்களைத் தொடர்ந்து கி.பி.1639ஆம் ஆண்டு ஒல்லாந்தர்கள் திருகோணமலையைக் கைப்பற்றி திருக்கோணேஸ்வர ஆலயத்தில் மிகுதியாக இருந்த தூண்களையும் கற்களையும் இடித்துத் தமது கோட்டையினைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கட்டுவதற்காகப் பயன்படுத்தினர் எனவும் அறியப்படுகின்றது.

சுமார் 175 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியினை ஏற்றதும் அவர்கள் திருக்கோணேஸ்வர ஆலயத்தின் மகிமையை உணர்ந்து மக்களுக்கான மத சுதந்திரத்தை வழங்கினர். அக்காலத்தில் அர்ச்சகரும், பக்தர்களும் கோணேஸ்வர ஆலயத்திற்குச் சென்று வழிபடுவதற்குரிய உத்தரவினைப் பெற்ற பின்னர் ஆலயத்திற்குச் சென்று வழிபட அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு மேலைத் தேசத்தவர்களால் அழிக்கப்படுவதற்கு முன்னர் திருக்கோணேஸ்வர ஆலயம் மிகவும் கீர்த்தியுடன் விளங்கியது என்பதற்கும், கத்தோலிக்கருக்கு ரோமபுரி



போன்று இந்துகளுக்குத் திருகோணமலை இருந்தது என்பதற்கும் "கீழைத் தேச மக்களின் ரோமபுரி திருகோணமலை" என்ற மேலைத் தேச அறிஞர்களின் கூற்று, சான்றாக விளங்குகின்றது.

இதனைத் தொடர்ந்தும் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது கோணேசர் மலை மீது குண்டுகளை வீசினார்கள். ஆனால் கோணேசப் பெருமானின் திருவருளால் வீசப்பட்ட குண்டுகளில் ஒன்றேனும் கோணேஸ்வர ஆலயத்தில் விழவில்லை. இதன் மூலம் இவ்வாலயத்தின் தெய்வீகச் சிறப்பினை நாம் உணர்ந்து கொள்ளலாம்.




இவ்வாறு பல நூற்றாண்டுகளாக பல இடர்பாடுகளையும் சந்தித்த திருக்கோணேஸ்வர ஆலயத்தில் இருந்த புராதன திருவுருவங்கள் பல பின்னர் கண்டெடுக்கப்பட்டன. திருக்கோணேச மூர்த்தம், மாதுமை அம்மன், சந்திர சேகரர் சிலைகள் என்பன 1950ஆம் ஆண்டு ஆனி மாதம் 27 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்டு நாடு முழுவதும் நகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலமாக எடுத்துச் செல்லப்பட்டு 1952 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆம் திகதி அன்று திருக்கோணேஸ்வர ஆலயத்தில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1963 ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப்பட்டு புதிய கோணேஸ்வர ஆலயதற்குரிய கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வாறு பல நூற்றாண்டுகளின் பின் பல அழிவுகளுக்குப் பின்னர் மீண்டும் இறைவனது திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டமை திருகோணமலை வாழ் மக்களுக்கு மட்டுமன்றி, உலகெங்கும் வாழும் இந்து மக்களுக்கும் பெருமகிழ்வினை அளித்தது.

ஆக்கம் : **ச. வாசுகி** (பழைய மாணவி)




## குறுக்கெழுத்துப் போட்டி

1. திருதராட்டிரன், பாண்டுவின் தம்பி
2. கலைகள் ஆரம்பிக்க சிறந்த நாள்
3. ஸ்ரீ இராமகிருஷ்ணரின் முதன்மைச் சீடர் இவர்
4. அர்ஜூனனின் மறுபெயர். வில்லுக்கு _______
5. சிவனுக்கு அர்ச்சிக்க உகந்த இலை
6. மஹாபாரதத்தில் 4ஆவது பகுதி. _______ பர்வம்
7. நரேந்திரனின் தந்தை _______ தத்தர்
8. கோயில் மூலஸ்தானத்தின் மேல் கூரை
9. ஸ்ரீ கிருஷ்ணரின் மற்றொரு திருநாமம்
10. இராம பக்தனான இராவணனின் தம்பி
11. காசியில் உறையும் சக்தி
12. நாயன்மார்களில் ஒருவர்
13. அகலிகைக்கு இராம பிரானால் சாப _______ கிடைத்தது
14. மஹாபாரதத்தை இயற்றியவர்
15. ஆலயத்தின் கருவறையில் இருப்பது
16. வினைகளைத் தீர்ப்பவர் இவர் முதற்கடவுள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இறைவன் மனித குலத்தின் மீது கொண்ட தனிப்பெருங் கருணையினால் அதன் விடிவிற்காக உலகினில் பிறப்பெடுத்ததை உலக வரலாற்றில் நாம் காண்கின்றோம். அவ்வாறானதோர் சந்தர்ப்பம் மீண்டும் மேற்கு வங்காளத்தில் நிகழ்ந்திருப்பதை பைரவி பிராம்மணி கூட்டிய பண்டித சபை நிரூபித்தது.

இராமகிருஷ்ணர், இறைவன் என்கின்ற சத்தியத்திற்காக உலகியல் பற்றுக்கள் அனைத்தையும் துறந்த உன்னத பக்தன் மட்டுமல்ல என்பதனை அவரின் ஆன்மீக அனுபவங்களும், அவரின் மனநிலை வெளிப்பாடுகளும், மனித சக்தியின் எல்லைக்கு அப்பாற்பட்ட சம்பவங்களும் எடுத்துக் காட்டின. அவர் இறைவனின் அவதாரமே என அச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சில சமயங்களில் பைரவி பிராம்மணி இராமகிருஷ்ணரின் அசாதாரண ஆற்றல்களின் வெளிப்பாட்டினைக் கண்டு வியந்தும், சாதாரண நிலையில் பாலகோபாலனாகப் பாவித்தும் அன்பு செலுத்தினார். அவ் அன்பின் காரணமாக பைரவி தன் சலிப்பில்லாத ஆன்மிக வழிமுறையான தாந்திரிக நெறியில் சாதனைகள் செய்து, தாம் பெற்ற ஆன்மிக அறிவு, தவத்தின் பலன் ஆகியவை இராமகிருஷ்ணருக்குக் கிடைக்க வேண்டும் என விரும்பினார். பைரவியின் விருப்பத்தை அறிந்த இராமகிருஷ்ணர், அன்னை காளி மூலம் தாந்திரிக சாதனைகள் செய்வதற்கான தேவையினையும், அவசியத்தினையும் தெரிந்து கொண்டார்.



அன்னை காளியின் அருளாணையைப் பெற்ற இராமகிருஷ்ணர் அனைத்தும் மறந்து பைரவியின் வழிகாட்டுதலில் தாந்திரிக சாதனையில் மூழ்கினார். விஷ்ணு கிராந்தி எனும் நூலில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்து நான்கு தந்திரங்களை ஒன்றன் பின் ஒன்றாகச் செய்து வெற்றி கண்டார். இச்சாதனை அனுபவங்கள் குறித்து இராமகிருஷ்ணர் தம் பக்தர்களிடம் இவ்வாறு பகிர்ந்துகொள்கின்றார்.

"பகல் வேளைகளில் பைரவி, கோயிலிலிருந்து வெகுதூரம் சென்று, பல இடங்களில் தேடி, தாந்திரிக சாதனைகளுக்குத் தேவையான அபூர்வப் பொருட்களைத் திரட்டி வருவார். அவற்றை இரவு நேரத்தில் பஞ்சவடி அல்லது வில்வ மரத்தின் கீழ் வைத்துவிட்டு என்னை அழைப்பார். அந்தப் பொருட்களைக் கொண்டு அன்னையின் பூசையை முறைப்படி செய்து விட்டு, ஜப தியானங்களில் ஆழ்ந்து ஈடுபடுமாறு செய்வார். ஏனோ என்னால் இவற்றில் சிறிதும் ஈடுபட முடியவில்லை. ஜபமாலையை உருட்டத் தொடங்கியவுடனேயே மனம் சமாதியில் மூழ்கிவிடும். சாஸ்திரம் கூறுகின்ற பலன் உடனே அனுபவமாகிவிடும். காட்சிக்குப் பின் காட்சி, அனுபவத்திற்குப் பின் அனுபவம் என்று எத்தனை அற்புத அனுபவங்கள்! நான் கண்ட காட்சிகளும் பெற்ற அனுபவங்களும் எண்ணிலடங்கா." பல சாதகர்கள் முயன்று தோல்வியடைந்த கடினமான இச்சாதனைகளில் இராமகிருஷ்ணர் அன்னை காளியின் அருளால் இலகுவில் வெற்றி பெற்றார்.



அக்காலகட்டத்தில் தாந்திரிக சாதனைகள் புரிந்த சாதகர்களின் மனப் பலவீனங்களும், பிழையான வழிகாட்டுதல்களும் தாந்திரிக நெறி முறைகள் தடம் மாறி இறைவனை அடைவதற்குரிய வழிமுறைதானா என்ற கேள்விக்கு இட்டுச் சென்றன.

ஆனால் யுகாவதார புருஷரான இராமகிருஷ்ணர் அந்நெறியும் இறைவனை அடைவதற்கான மார்க்கங்களில் ஒன்று என்பதை நிரூபித்தார். பிற்காலத்தில் அவரிடம் இறைவனை அடைவதற்கான ஏக்கத்துடன் வந்த தாந்திரிக நெறி சாதகர்களுக்கு அவர் வழிகாட்டியாக விளங்கியதை நாம் அவர் வாழ்க்கையில் காணலாம்.


ஆக்கம் : **உ.சசிதரன்,** பழைய மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கதை: சி. அபிராமி

# குணம் நாடி

படம்: ம. கிருத்திகன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத இந்து தர்மம் - VII

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் இவர்கள் மூவரும் **'முதலாழ்வார்கள்'** என்று அழைக்கப்படுகின்றனர். ஆழ்ந்த பக்தியில் ஈடுபட்டிருந்த முதலாழ்வார்கள் மூவரும் ஒரே இடத்தில் தங்காமல் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு ஊரில் தங்கி, ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே வாழ்ந்து வந்தார்கள்.



*முதலாழ்வார்கள்*

இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில், 'இவர்களைக் கொண்டு ஞானமும் பக்தியும் கொடுக்கவல்ல திவ்யப் பிரபந்தங்களை உலகம் உய்வதற்காகத் தோற்றுவிக்க வேண்டும். இதனால் அறியாமை எனும் இருள் அகன்று உண்மை ஒளி எங்கும் பிரகாசிக்கட்டும்' என்று திருமால் திருவுள்ளம் கொண்டார்.



## ஆழ்வார்கள்

உடனே அம் மூவருடைய மனத்திலும் பெண்ணையாற்றின் கரையிலிருக்கும் திருக்கோவலூருக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தார். அத் தலத்தில் 'திருவிக்கிரமர் (உலகளந்த பெருமாள்)' ஆக மஹாவிஷ்ணு எழுந்தருளியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முன்னொரு சமயம் மகாபலி என்னும் அரசன் தான தர்மத்தில் சிறந்தவனாக இருந்தான். தன்னைவிடப் புகழ் பெற்றவர்கள் யாரும் இருந்துவிடக் கூடாது என்பதற்காக, மாபெரும் யாகம் ஒன்றை நடத்தினான். அவனது ஆணவத்தை அடக்கும் பொருட்டு மஹாவிஷ்ணு வாமன அவதாரம் எடுத்து யாகம் நடக்கும் இடத்திற்கு வந்து மூன்றடி மண் தானமாகக் கேட்டார். தானம் தர மகாபலியும் ஒப்புக்கொண்டான். அப்பொழுது வாமனர் விஸ்வரூபம் எடுத்துத்



தன் பாதத்தின் ஒரு அடியை பூமியிலும், ஒரு அடியை ஆகாயத்திலும் வைத்துவிட்டு மூன்றாவது அடியை எங்கு வைப்பது என்று கேட்கின்றார். வந்திருப்பது ஸ்ரீமந் நாராயணனே என்றுணர்ந்த மகாபலி, தன் தலையைத் தவிர வேறு இடம் தன்னிடம் இல்லை என்று கூறவும், மகாபலியின் தலை மீது தன் பாதத்தை அழுத்த மகாபலி மண்ணில் புதையுண்டு போனான்.

அவனது ஆணவத்தை இவ்வாறு அடக்கிய பின்பு மகாபலியை விஷ்ணு தன்னோடு சேர்த்துக் கொண்டார் என்று திருக்கோவலூர்த் தலவரலாறு கூறுகின்றது. இங்குள்ள பெருமாள் மகாபலியைத் தன்னுடன் இணைத்துக் கொண்ட மகிழ்ச்சியில் என்ன செய்கின்றோம் என்று தெரியாமல், வழமைக்கு மாறாக வலக்கையில் சங்கும் இடக்கையில் சக்கரமும் ஏந்திக் காட்சி தருகின்றார்.

பொய்கை ஆழ்வார் இத் தலத்தை அடைந்த பொழுது பலத்த மழை பெய்ய ஆரம்பித்தது. எங்கும் செல்ல முடியாத நிலையில், அவர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிலிருந்த மிருகண்டு முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கு மழைச்சாரல் அடிக்காமல் இருக்க வேண்டிக் கதவை அடைத்து விட்டு ஆசிரமத்தின் முன்பகுதியில் படுத்துக் கொண்டார்.

சிறிது நேரத்தில் திருமாலின் திருவிளையாடலால், அதே இடத்திற்கு பூதத்தாழ்வாரும் வந்து சேர்ந்தார். இருட்டில் கதவைத் தட்டி, "சுவாமி! அடியவனுக்கும் சிறிது இடம் கிடைக்குமா?" என்று கேட்டார். உடனே பொய்கையாழ்வார், "நல்லது சுவாமி! இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், தேவரீர் எழுந்தருளுக இருவரும் இருப்போம்" என்று கூறி இருவரும் அமர்ந்து கொண்டு, திருமாலின் பெருமைகளைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர்.



சற்று நேரத்தில் மூன்றாவதாகப் பேயாழ்வார் அதே இடத்திற்கு வந்து சேர்ந்தார். கதவை மெதுவாகத் தட்டி, "அடியேன் தங்க இடமுண்டா?" என்று கனிவாகக் கேட்டார். பொய்கையார், "இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவராயின் நிற்றல் வேண்டும்! அதுவும் நல்லதே, மூவரும் இருள் நீங்கிப் பொழுது புலரும் வரை நின்று கொண்டிருப்போம்!" என்று கூறினார். பிறகு அவர்கள் ஒருவரை ஒருவர் வினவி அறிந்து கொண்டு உலகளந்த பெருமாளின் திருவடிச் சிறப்பைப் போற்றியவாறு நின்று கொண்டிருந்தனர்.



அப்பொழுது கார்முகில் வண்ணனான கோவிந்தன், அவர்கள் அறியா வண்ணம் அக் குறுகலான இடத்தில் அம் மூவரிற்கிடையே தானும் புகுந்து அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெருக்கத் தொடங்கினார். திடீரென்று தமக்கிடையே நெருக்கம் அதிகரித்ததையும் அதனால் மூச்சுவிடக்கூட முடியாமலிருப்பதையும் உணர்ந்த அம் மூவரும் "என்ன இது? இங்கு புதிதாக வந்தவர் யார்?'' என்று தங்களுக்குள் கேட்டுக் கொண்டனர். ஆனால் கொடிய இருளில் எதுவும் தென்படவில்லை.

அப்பொழுது பொய்கையார் நாராயணனைத் தியானித்துப் புற இருள் நீங்க வேண்டி, வேதத்தின் உட்பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றாகத் திரித்து, அன்றெரித்த திருவிளக்காக முதல் திருவந்தாதியைப் பாட முற்பட்டு பின்வரும் முதற் பாசுரத்தைப் பாடினார்:

வையம் தகளியா வார் கடலே நெய் ஆக
வெய்ய கதிரோன் விளக்கு ஆகச் - செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை
இடர் ஆழி நீங்குகவே என்று.

பொருள்: உலகத்தை அகலாக கடலை நெய்யாக சூரியனை ஒளிப்பிழம்பாக நினைத்து ஒரு விளக்கை, ஒளி மிகுந்த சக்கரம் ஏந்திய திருமாலின் திருவடியில் ஏற்றி, சொற்களால் ஒரு மாலை தொடுத்து துன்பக் கடல் நீங்குவதற்காக வணங்கினேன்.


- மிகுதி அடுத்த இதழில்....

ஆக்கம்: **சி. அபிராமி,** தொண்டராசிரியை
(பழைய மாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகத்தின் சிகரம்




குறள்: அன்பு ஈனும் ஆர்வம் உடைமை
அது ஈனும் நண்பென்னும் நாடாச் சிறப்பு

பொருள்: அன்பானது பிறர்பால் ஆர்வம் உடையவராகும் பண்பைத் தரும். அந்தப் பண்பானது நட்பு என்கிற அளவற்ற மேன்மையைத் தரும்.

விஜயபுரம் என்ற நாட்டை பரணீதரன் என்ற அரசர் ஆட்சி செய்து வந்தார். இந்நாட்டின் பக்கத்தில் பாண்டி நாடு இருந்தது. அந்த நாட்டை வீரபாண்டியன் என்ற அரசர் ஆட்சி செய்து வந்தார். விஜயபுரத்தை விடவும் செழுமையான அழகிய நாடாக பாண்டி நாடு காணப்பட்டது. அதனால் விஜயபுர அரசருக்கு



எப்படியேனும் வீரபாண்டியனோடு சண்டையிட்டு வெற்றி பெற்று, பாண்டி நாட்டைக் கைப்பற்றி விட வேண்டும், அதன் பின்னர் இரு நாட்டையும் ஒன்றாக இணைத்துப் பெரிய நாடாக்க வேண்டும் என்ற ஆசை உதித்தது. பின்னர் தான் அந்த ராஜ்யத்திற்குப் பேரரசராக இருந்து ஆட்சி புரிய வேண்டும் என்று ஆசைப்பட்டார். உடனே தன்னுடைய தளபதியை அழைத்து போருக்குப் படைகளைத் தயார்ப்படுத்துமாறு கூறினார்.

அடுத்த நாள் விஜயபுரம் அரசவைக்கு இளம் முனிவர் ஒருவர் வந்தார். அரசர் அவரை அன்புடன் வரவழைத்து உபசரித்தார். முனிவர் அரசரிடம், "அரசே! தங்கள் வரவேற்பிற்கு நன்றி! நான் உலக சமாதானத்தையும், மனித நேயத்தையும் ஒவ்வொரு நாடாகப் பரப்பிக் கொண்டிருக்கின்றேன். நாட்டுக்கு நாடு சண்டையிட்டுக் கொள்ளாமல் சமாதானமாக வாழ்ந்து, ஒருவருக்கொருவர் உதவி புரிந்து பரந்த மனப்பான்மையோடு அனைவரும் வாழ வேண்டும் என விரும்புகின்றேன்." என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவரின் பேச்சைக் கேட்ட அரசன் கோபப்பட்டான். முனிவரைப் பார்த்து, "முனிவரே!! பாண்டி நாட்டோடு போரிட்டு வீரபாண்டியனைத் தோற்கடித்து, அந்த நாட்டை என் நாட்டோடு இணைத்துப் பேரரசாக்கி ஆட்சி புரிவதே என் இலட்சியம். எனவே உமது அறிவுரை எனக்குத் தேவையில்லை!!!" என்றான்.



அதைக் கேட்ட முனிவர் அரசரிடம், "அரசே! நாம் அனைவரும் சகோதரர்கள், நமக்கெல்லாம் தந்தை இறைவனே! அவனை வணங்கி வாழ்வில் வளம் பெறுவோம். ஏனைய நாடுகளை அழித்து அதன் வழி வளம் பெற வேண்டாம்!!" என்று உருக்கமாகக் கூறினார். இதைக் கேட்டு மேலும் ஆத்திரமுற்ற அரசன், "முனிவரே!! உமது அறிவுரைகளை என்னிடம் கூறுவது பயனற்றது. ஏதோ அரசவைக்கு வந்த உமக்கு மரியாதை கொடுத்து வரவேற்றேன். இனி நீர் இங்கிருந்து செல்லலாம்" என்றான்.

அடுத்த நிமிடம் முனிவர் தன் மீசை, தாடியை எடுத்துத் தனது வேஷத்தைக் கலைத்தார். முனிவராக வந்தது, பாண்டி நாட்டின் அரசன் வீரபாண்டியன் தான் என்பதைக் கண்ட பரணீதரனும் அரசவையில் இருந்த மற்றவர்களும் திடுக்கிட்டனர்.

உடனே வீரபாண்டியன், "விஜயபுர அரசரே! என் நாட்டை இப்பொழுதே தங்களிடம் ஒப்படைத்து விடுகின்றேன். என் நாட்டை இழப்பதற்காக நான் வருந்தவில்லை. ஆனால் நான் அரசனாக இருக்க வேண்டும் என்பதற்காக என் நாட்டு மக்கள் அநியாயமாகப் போரில் இறப்பதை நான் விரும்பவில்லை.




மக்களுக்கு இறையன்பையும், ஒருவருக்கொருவர் சகோதர பாசத்துடன் பழகும் நற்குணத்தையுமே நாம் வளர்க்க வேண்டும். போர் வெறியைத் தூண்டி, மனதாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலாலும் பொருளாலும் துன்பப்படும் நிலையை நாம் உருவாக்க வேண்டாம்!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

இதைக் கேட்டதும் பரணீதரன் தன் செய்கையை நினைத்து வெட்கித் தலைகுனிந்தான். அவனின் பேராசை விலகியது அறிவுக்கண்கள் திறந்தன. வீரபாண்டியனின் நற்பண்பை உணர்ந்து வியப்படைந்தான். வீரபாண்டியனிடம் தன் செயலுக்காக வருத்தம் தெரிவித்து, "இன்று முதல் என் மண்ணாசையை விட்டொழிக்கின்றேன். உலக சமாதானத்தைப் பரப்புவதாக உறுதி கூறுகின்றேன்." என்று உறுதி பூண்டான்.



பரணீதரன் அரியணையை விட்டு, கீழே இறங்கி வந்து வீரபாண்டியனைக் கட்டி அணைத்துக் கொண்டான். அரசவையில் இருந்த அனைவரும் "பரணீதரன் வாழ்க! வீரபாண்டியன் வாழ்க!" என வாழ்த்தொலி எழுப்பினார்கள். அன்றுமுதல் வீரபாண்டியனைத் தன் சகோதரனாக ஏற்றுக் கொண்டான் பரணீதரன். இருவரும் நீண்டகாலம் நல்லாட்சி புரிந்தனர்.

ஆக்கம் : **ச. அக்ஷயா** (தன்னார்வத் தொண்டர்)

**கடந்த இதழின் குறுக்கெழுத்துப்போட்டி விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கு | ந் | 2 தி | | 3 லை | 4 சி |
| க | | 5 சி | ஏ | கா | த |
| 6 ன் | 7 சி | த் | த | | ம் |
| | ட் | ரை | | 8 தி | ப |
| 9 லை | மா | | 10 வீ | | ர |
| 11 ம | கா | பா | ர | த | ம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்கள்

## அறிமுகம்

*"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"* என்ற, ஔவையாரின் வாக்கிற்கு இணங்க எங்களுக்கு இந்தக் கிடைத்தற்கரிய மானிடப் பிறவி கிடைத்திருக்கிறது. 'இந்த வாழ்க்கை எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டுமா அல்லது நாங்கள் விரும்பியவாறு அமைய வேண்டுமா?' என்று கேட்டால் அநேகமானோரது ஆசை 'நாங்கள் நினைப்பதுபோல் தான் எங்கள் வாழ்க்கை அமைய வேண்டும்' என்பதாகத்தான் இருக்கும். ஆனால் பலரது வாழ்க்கை அவ்வாறு அமைவதில்லை. அதற்கான காரணம் என்ன?

இந்தக் கேள்விக்கு ஒருவன், **"எல்லாம் தலைவிதி"** என்று பதில் சொல்கிறான். இன்னொருவன் "நாங்கள் என்னதான் ஆசைப்பட்டாலும் ஆண்டவன் இச்சைப்படிதான் எல்லாம் நடக்கும். நாங்கள் என்ன செய்ய முடியும்!" என்று அங்கலாய்க்கிறான். இன்னொருவனோ, "நாங்கள் சரியாகத் திட்டமிட்டு முயற்சித்தால் நிச்சயமாக நாங்கள் நினைப்பதுபோல் எங்கள் வாழ்க்கை அமையும்" என்று நம்பிக்கை தெரிவிக்கிறான். ஆனால் இந்த மூன்று பதில்களும் தவறானவை. அவற்றில் என்ன தவறு என்பதை அறியமுன் நாம் சில முக்கியமான விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பதில்களில் என்ன தவறு என்பதைப் பின்னர் ஒரு பகுதியில் காண்போம்.

எண்ணம்போல் வாழ்வு அமைவது சாத்தியமா என்று கேட்டால் நிச்சயமாக சாத்தியமே. ஆனால் பெரும்பாலானவர்களுக்கு, தாங்கள் நினைப்பதுபோல் எங்கள் வாழ்க்கை அமைவதில்லையே என்ற கேள்விக்கு, கேள்வியிலேயே பதில் உள்ளது. நாங்கள் சரியாக நினைப்பதில்லை. தவறு அங்கேதான் உள்ளது. ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள் உள்ளன. அதில் வெறும் இரண்டு நிமிடம் 'என் வாழ்க்கை இப்படியெல்லாம் இருக்க வேண்டும்' என்று, பகற் கனவில் ஒரு ஆகாயக் கோட்டை கட்டிவிட்டு மிகுதி 23 மணித்தியாலம் 58 நிமிடங்கள் அந்தக் கனவுக்குத் தொடர்பே இல்லாத விடயங்களில் மூழ்கிக் கிடந்தால் எவ்வாறு எங்கள் எண்ணம் பலிக்கும்? மொத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் அதிக நேரத்தை நாம் எவற்றைப்பற்றிய சிந்தனைகளில் கழித்தோமோ அவைதான் எங்கள் வாழ்வாக விளையும். புவியீர்ப்பு விதியைப்போல இதுவும் ஒரு நிச்சயமான, இயற்கையான விதியே.

ஒரு கோப்பை தேநீர் இனிப்பாக இருக்க வேண்டும் என்றால் இரண்டு கரண்டி சீனி போட வேண்டும். வெறுமனே இரண்டு துகள் சீனியைப் போட்டுவிட்டு, தேநீர் இனிக்கவில்லை என்று குறை கூறலாமா? அதுபோல்தான் எங்கள் வாழ்வு நாங்கள் விரும்பியதுபோல் அமைய வேண்டும் என்றால் தினமும் எமது நேரத்தில் பெரும்பாலான பகுதியை எமது கனவுக்காக ஒதுக்கவேண்டும். அந்த நேரத்தில் எங்கள் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் அந்தக் கனவை மையம் கொண்டதாக இருக்க வேண்டும். அதனாலேயே அப்துல் கலாம், "கனவு காணுங்கள். ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல. உன்னைத் தூங்கவிடாமல் பண்ணுவது எதுவோ அதுவே உண்மையான கனவு" என்கிறார். அவ்வாறு அமையும்போது நிச்சயமாக எங்கள் கனவு நனவாகியே தீரும்.

அடுத்து, வாழ்க்கை என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கை, சில ஜீவராசிகளுக்கு வெறுமனே இருப்பு (existance) மட்டுமே. வேறு சிலவற்றுக்கு, தப்பிப் பிழைத்தல் (survival). இன்னும் சிலவற்றுக்கு சாதித்தல் (acheivement). தாவரங்கள் வெறுமனே இருக்கின்றன, வளர்கின்றன மடிந்து போகின்றன. மிருகங்களின் வாழ்க்கை இரையைத் தேடுவதிலும் உடலின்பத்திலும் உறக்கத்திலுமே முடிந்துவிடுகிறது. ஆனால் மனிதனால் மிருகங்களைப் போன்று வாழ்ந்து அழிந்து போகவும் முடியும் அல்லது ஒரு இலட்சியத்தை எடுத்து அதைச் சாதிக்கவும் முடியும். இதைத் தீர்மானிப்பது எமது எண்ணங்களே. எண்ணங்களில் இருந்து இலட்சியத்தை நோக்கிய வாழ்க்கைப் பயணத்தின் கையேடாக இத் தொடர் அமையவிருக்கின்றது.



ஆக்கம் : **க. சொரூபன்** -தொண்டராசிரியர் (பழைய மாணவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரம் தொட்ட சபரி வெங்கட்



அரங்கம் நிரம்பி வழிகின்றது மாற்றுத் திறனாளிச் சிறுவர்களுக்கு விருது வழங்கும் விழா அது. நிகழ்ச்சிகள் நிறைவடைந்ததும் அந்நிகழ்வின் பிரதம விருந்தினர், அங்கிருந்த பார்வையற்ற சிறுவன் ஒருவனை பேசச் சொல்கின்றார். எந்த முன்தயாரிப்பும் இல்லாமல் அவன் பேசப்பேச அரங்கமே எழுந்து நின்று கைதட்டுகின்றது. அவன் பேச்சைக் கேட்டுப் பரவசமடைந்த பிரதம விருந்தினர், "அற்புதமான உரை, மிகவும் நன்றாக இருந்தது! நீ என்னுடைய இன்னொரு நண்பன்!!" (Great speech; Well done. You are my another friend) என்று சொல்லிப் பெருமைப்படுத்துகின்றார். இப்படி ஒரு சிறுவனை மனமுவந்து தனது நண்பனாக அறிவித்தவர், இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி திரு. அப்துல் கலாம். அந்த, பார்வையற்ற சிறுவன் சபரி வெங்கட்.



## சாதனையாளர்

இந்தியாவிலுள்ள பொள்ளாச்சியில் இருந்து 25 Km தொலைவில் கோவை - பாலக்காடு எல்லையில் இருக்கும், வடகாடு என்னும் கிராமத்தில் விவசாயம் செய்து வந்தனர் சீனிவாஸ் - நீலவேணி தம்பதியர். அவர்களுக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகள் ஆனபோதும் குழந்தைப்பேறு வாய்க்கவில்லை. பல்வேறு சிகிச்சைகளின் பின்னர் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து, குறைப் பிரசவத்தில் பிறந்த குழந்தையே சபரி வெங்கட்.

பிறந்த குழந்தை அழவில்லை மூச்சுப் பேச்சில்லை. வைத்தியர்களின் தொடர் முயற்சி காரணமாக சபரி வெங்கட் காப்பாற்றப்பட்டு, சரியாகப் பதினெட்டு நாட்கள் கழித்துத் தான் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான். குழந்தையின் பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பில் குறைபாடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, வலது கண்ணில் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. ஆனால், அது தோல்வி என்பது சில மாதங்களுக்குப் பின்னரே பெற்றோருக்குத் தெரியவந்தது. பின்னர் பலவகைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை எதுவும் பயனளிக்கவில்லை. மேலதிக மருத்துவத்திற்குப் பணமோ போதிய வசதிகளோ அவ்வூரில் இல்லாத காரணத்தால், அவர்கள் கோயம்புத்தூரிற்குக் குடிபெயர்ந்தார்கள்.

அங்கு பெரியநாயக்கன் பாளையத்தில் இருக்கும் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் சபரி வெங்கட்டிற்கு அனுமதி கிடைத்தது. அங்குள்ள சுவாமிஜி மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டுதலால் சபரியிடமிருக்கும் அபூர்வமான பேச்சுத்திறமையானது கண்டுபிடிக்கப்பட்டு மெருகேற்றப்பட்டது. இவன் மாற்றுத்திறனாளி என்றாலும் இவனுடைய திறமையையும் ஆர்வத்தையும் பார்த்து, சாதாரண குழந்தைகளுடன் படிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

சிறந்த நினைவாற்றல் கொண்ட சபரி ஒரு முறை கேட்டதை அப்படியே நினைவில் வைத்து மீண்டும் கூறும் ஆற்றல் கொண்டவன். எனவே அவன் பெற்றோர் பல்வேறு நூல்களை குறிப்பாக பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தரின் புத்தகங்களை வாசித்துக் காட்டுவார்கள். அவற்றில் தனக்குத் தேவையானவற்றைக் குறிப்பெடுத்துக் கொண்டு, அதன் மூலம் பல மேடைகளில் இன்றும் பேசி வருகின்றான். சபரி, சுவாமி விவேகானந்தரைத் தனது வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கொண்டு, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மக்கள் அரங்கம் என்று அனைத்து இடங்களிலும் அவரது கருத்துக்களை எளிமையாக அனைவரும் விளங்கி ஏற்றுக்கொள்ளும்படி கூறிவருகின்றான்.



அதுமட்டுமல்லாது சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுவிழா நடந்த பொழுது, சென்னை இராமகிருஷ்ண மடம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு கட்டுரைப் போட்டியை நடத்தியது. தமிழ்நாடு முழுவதிலுமிருந்து அண்ணளவாக பத்து லட்சம் மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர். அதில் முதல் மாணவனாக சபரி தேர்ந்தெடுக்கப்பட்டான். அன்றைய தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அந்த விருதைச் சபரிக்கு வழங்கினார். மேலும் 2015 ஆம் ஆண்டின் "சிறந்த ஆக்கத்திறன் மிக்க மாற்றுத் திறனாளிக் குழந்தை" (Best Creative Child with Disabilities) விருதும் (சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சினால் வழங்கப்பட்ட விருது - Award by the Ministry of Social Justice and Empowerment) சபரிக்கு வழங்கப்பட்டது.



தற்போது பதினைந்து வயதாகும் சபரிக்கு பிரெய்ல் (Braille) முறையில் எழுதவும் படிக்கவும் தெரியும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடியவன். தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, கொல்கத்தா என்று இருநூறுக்கும் மேற்பட்ட மேடைகளில் உரையாற்றியிருக்கின்றான். ஆக்கத்திறன் பேச்சாளர் (Creative speaker), ஊக்கமூட்டும் பேச்சாளர் (Motivational speaker), சிறப்பு விருந்தினர் (Special Guest), தலைமை விருந்தினர் (Chief Guest) ஆகப் பல நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றான்.

சபரியின் வாழ்க்கை விரைவில் புத்தகமாக வெளிவர இருக்கின்றது. அப்துல் கனி என்பவர் அதற்கான பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றார். சபரியிடம் "உங்களைப் போன்ற சக மாணவர்களுக்கு உங்கள் செய்தி என்ன?" என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்ட பொழுது, "தன்னம்பிக்கையை இழக்காதீர்கள் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பளியுங்கள்" (Don't lose your self-confidence. Obey your parents. Respect your teachers!) என உற்சாகத்துடன் பதிலளித்தான்.

*"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து*

*ஆள்வினை இன்மை பழி"*



(பொருள்: உடல் உறுப்புகளின் ஊனம் எவர்க்கும் குற்றமாகாது அறிவினால் அறியப்படுவன அறிந்து முயற்சி செய்யாமையே குற்றம்.)

என்ற குறளின் பொருளைச் சபரி நமக்குப் புரியவைக்கின்றான்!!!!

ஆக்கம் : ந. சஞ்ஜீவன், தன்னார்வத்தொண்டர்

# படம் தரும் பாடம்

இந்தப் படத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் பாடம் என்ன? உங்கள் கருத்துக்களை அண்ணளவாக 100 சொற்களில் எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கம் உரிய திருத்தங்களுடன் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மைச் சம்பவம்**

இன்றைய சூழலானது மனிதர்கள் ஆனந்தமாகவும் ஆரோக்கியமாகவும் வாழுவதற்குச் சவாலாகக் காணப்படுகின்றது. வேகமாகப் பரவி விரிந்து வருகின்ற தொழில்மயமாக்கல் காரணமாக பெரும்பான்மையான காடுகள் இன்று அழிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளில் காடழிப்பானது பெருமளவில் இடம்பெறுகின்றது. இந்நிகழ்வினால் உயிர்களின் வாழ்க்கை முறை பாதிக்கப்படுவதோடு நாம் வாழும் பூமியின் தன்மையும் மாறி, எதிர் காலத்தில் உயிரினங்களின் வாழ்வினை கேள்விக்குறி ஆக்கியுள்ளது. இத்தகைய நிலைமையில் உலகை உயிர்கள் வாழ்வதற்கு உகந்த இடமாக மாற்றுவதற்கு உழைத்த ஒருவரைப்பற்றி இந்த இதழில் பார்ப்போம்.


## வெற்றியின் இரகசியம்




சுபெந்து சர்மா (Shubhendu Sharma) என்பவர் கர்நாடகா மாநிலத்திலுள்ள டொயோட்டா (Toyota) தொழிற்சாலையில் ஒரு பொறியியலாளராக வேலை செய்துகொண்டிருந்தார். திரு. அகிரா மியாவாக்கி (Mr. Akira Miyawaki) என்பவர் அவரது வேலைத்தளத்தில் மரச்சோலைகளை (forest) உருவாக்குவதற்காக வந்த பொழுது, சர்மாவும் மியாவாக்கி உடன் இணைந்து சோலையை அமைக்கத் தொடங்கினார். மியாவாக்கி அதில் பயன்படுத்திய புதிய முறை மூலம், சாதாரணமாக ஒரு மரம் வளர எடுக்கும் காலத்தை விட வேகமாக அதை வளர்க்க முடியும்.

தற்போதைய காலத்தில் காடழிப்பு காரணமாக சூழலில் பிராண வாயுவின் அளவு குறைந்து வருகின்றது. அத்துடன் புவி வெப்பமும் அதிகரித்து வருகின்றது. இத்தகைய பிரச்சனைகளின் காரணமாகப் புவி, உயிர்கள் வாழ்வதற்கு பொருத்தமற்ற இடமாக மாறி வருகின்றது. இந்தப் பிரச்சனைகளுக்கு ஒரே தீர்வு காடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீண்டும் உருவாக்குவதே என்பதை சர்மா உணர்ந்து கொண்டார்.

எனவே சர்மா இந்தியா முழுவதும் பசுமையான காடுகளை விரைவில் உருவாக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்தார். காடுகளை எப்படி வேகமாக உருவாக்குவது என்று சர்மா சிந்தித்தபோது, மியாவாக்கி அவரது வேலைத்தளத்தில் மரச்சோலை உருவாக்கியது நினைவுக்கு வந்தது. எனவே அதே முறையின் மூலம் காடுகளை இந்தியாவிலும் உருவாக்கலாம் என்று திட்டமிட்டார்.

அவரது திட்டத்தில் முதற் கட்டமாக உத்தரகாண்டிலுள்ள அவரது வீட்டில் மரங்களை வளர்க்கத் தொடங்கினார். மியாவாக்கியின் முறையில் சில மாற்றங்களைச் செய்து ஒரு வருடகாலத்தில் அவரது வீட்டில் வெற்றிகரமாக மரங்களை வளர்த்தார்.

வீட்டில் இவர் செய்த முயற்சி வெற்றி பெற்றதால், மரம் வளர்க்கும் இம்முறையை இந்தியா முழுவதும் பரப்ப வேண்டும் என்ற நோக்குடன் தான் செய்து கொண்டிருந்த பொறியியலாளர் வேலையையே விட்டு விட்டார். மேலும் ஒரு வருட காலம் ஆராய்ச்சிகளை செய்து முன்னிலும் விரைவாக மரங்களை வளர்க்கும் முறையை உருவாக்கினார்.




இவர் காடு வளர்ப்பை இவரது முழுநேர வேலையாகச் செய்வதை இவரது குடும்பத்தினர் விரும்பவில்லை. எனவே இவர் அவரது குடும்பத்தினருக்குத் தெரியாமல் தனது நண்பர்களுடன் சேர்ந்து அபோரெஸ்ட் (afforest) எனும் அமைப்பை உருவாக்கினார். இவர் இதுவரை இந்த அமைப்பின் மூலம் 33 காடுகளை 11 நகரங்களில் உருவாக்கியுள்ளார். அதுமட்டுமன்றி பலர் இச் செயற்திட்டத்தை தமது பிரதேசங்களில் மேற்கொள்வதற்கும் உற்சாகமூட்டி வருகின்றார். இன்றும் இப்பணிகளைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவரும் சர்மா இளைஞர்களாகிய எமக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கின்றார். சர்மாவிடம், "உங்களது நோக்கம் என்ன?" என்று கேட்டபோது, சர்மா, "பழங்கள் மற்றும் காய் கறிகளைச் சந்தையிலிருந்து வாங்குவதைவிட வீட்டுத்தோட்டத்தில் இருந்து பெறுவது இலகுவானதாக வேண்டும். அதுவே எனது நோக்கம்." எனக் கூறினார்.

பார்த்தீர்களா, எந்த விதமான உதவியும் இல்லாமல் சர்மா தானே மிகவும் கடினமாக உழைத்து இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்து முடித்திருக்கின்றார். மேலும் இதற்காகத் தனது பெறுமதிமிக்க, அதிக வருமானம் ஈட்டக் கூடிய பொறியியலாளர் தொழிலையே தியாகம் செய்து இயற்கையை மீட்டெடுக்க போராடி வருகின்றார். அதுபோலவே நாமும் ஓர் இலட்சியத்தைத் தெரிவுசெய்து அந்த இலட்சியத்தை அடைவதற்காக உழைக்க வேண்டும். இலட்சியத்தை நோக்கிச் செல்லும்போது பல தடைகள் எழும். ஆனால் அவற்றையெல்லாம் தகர்த்து எறிந்துவிட்டு நமது இலட்சியத்தை நோக்கிச் செல்ல வேண்டும். இதையே சுவாமி விவேகானந்தரும், "எழுமின்! விழுமின்! குறி சாரும்வரை நில்லாது செல்மின்." என்று கூறுகின்றார்.






தன்னலம் கருதாது உலக மக்கள் அனைவரும் பயன்பெறும் பொருட்டு அவர் செய்துவரும் இச்சேவையானது எம் அனைவராலும் நன்றியுடன் உணரப்பட வேண்டியது. "சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள்." என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கிற்கிணங்க நாமும் எம்மால் இயன்றவரை பிறருக்குப் பயன் தரும் செயல்களைச் செய்து அடுத்துவரும் சந்ததியினருக்கு மகிழ்வான சூழலை ஏற்படுத்திக் கொடுப்போமாக.

ஆக்கம்: **த. சௌம்யன்**, தரம் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

14.05.2018 அன்று அறநெறி அமுதத்தின் 18 ஆவது அமுதத்தின் 2 ஆவது துளி இலங்கை இராமகிருஷ்ண மிஷனின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி மஹராஜ் அவர்கள் வெளியிட்டு வைத்து அறநெறி அமுத்ததின் மூலம் மாணவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடியபயன்கள் பற்றி சிறிய உரை ஒன்றையும் ஆற்றினார்.

புத்த பெருமான் பிறந்த, முக்தியடைந்த மற்றும் சமாதியடைந்த தினமான வெசாக் பூரணை தினமானது 29.04.2018 அன்று மாலை எமது ஆசிரமத்தில் வெகுவிமரிசையாக அனுஷ்டிக்கப்பட்டது. அந்நிகழ்வுக்கு, வணக்கத்திற்குரிய கலாநிதி. நைம்பால தம்மதாசி தேரர் (தலைவர் - பாளி மற்றும் பௌத்த கல்விகள் திணைக்களம், ஜெயவர்த்தன பல்கலைக்கழகம்) அவர்கள் வருகை தந்து சிறப்புரை ஆற்றியிருந்தார். எமது ஞாயிறு சமய பாடசாலை மாணவர்களால் 06.05.2018 அன்று கொண்டாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படம் தரும் பாடம்



தினசரி வியாபாரம் செய்து அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் வாழ்க்கை நடத்தி வரும் ஒரு ஏழை வியாபாரி அவர். வாழைப்பழங்களை விற்று வரும் பணத்தைக் கொண்டே அவரின் தினசரி தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம். இத்தகைய நிலையிலும் தன்னை அண்டிய மிருகங்களுக்கு தன்னால் கொடுக்க முடிந்த அவ் வாழைப்பழங்களை அளித்து அவற்றின் பசி போக்கும் காட்சியை சென்ற இதழில் வெளிவந்த 'படம் தரும் பாடம்' விளக்கி நிற்கின்றது.

"கடவுள் ஒவ்வோர் உயிரிலும் குடிகொண்டிருக்கின்றார். இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கின்றேன். உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை. உண்மையோடு ஒருவன் இந்த ஓர் அறத்தைக் கடைப்பிடிப்பானானால் அவன் முக்தி பெறுவது நிச்சயம்." என்கின்றார் சுவாமி விவேகானந்தர். திருவள்ளுவர் பெருமானும் தமது பொய்யாமொழியில், ***"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"*** - அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்: அன்பு உடையவர் தம் உடைமையையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.' என்று அன்பின் பெருமையை பகர்கின்றார். ஜீவ சேவையே சிவ சேவை என்ற சுவாமி விவேகானந்தரின் வழியில் நடக்கும் இளைஞர்கள் இன்றைய உலகிலும் இருக்கின்றார்கள் என்பதற்குச் சான்றாக இக்காட்சி அமைகின்றது. அந்தவகையில் மாணவர்களாகிய நாமும் எம்மால் இயன்ற வரை பிறருக்கு உதவி செய்து வாழ்வோமாக.

ஆக்கம்: **ந. சஞ்ஜீவன்,** தன்னார்வத் தொண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...



பிரான்ஸ் நாட்டின் மிகவும் பின்தங்கிய பகுதியான 'கார்ஸிகா' என்ற தீவில் 1769 ஆம் ஆண்டு பிறந்தவரே மாவீரன் நெப்போலியன் பொனபார்ட் (Napoléon Bonaparte). இவர் பிரெஞ்சுப் புரட்சியின் தளபதியாக, பிரான்சுக்கு எதிரான கூட்டணிப் போர்களை வழி நடத்தியதன் மூலம் பிரான்சு அரசியலில் முன்னணிக்கு வந்தார். அதன் மூலம் 1804 ஆம் ஆண்டு பிரான்சு நாட்டின் பேரரசராக முடிசூட்டப்பட்டார். தொடர்ச்சியான பல போர் வெற்றிகளினாலும், விரிவான கூட்டணிகளினாலும் ஐரோப்பாக் கண்டத்தையே தனது மேலாண்மைக்கு உட்படுத்தி ஆட்சி செய்த மாபெரும் வீரரே நெப்போலியன் பொனபார்ட்.

நெப்போலியன் பேரரசராக இருந்த காலத்தில் ஒரு நாள் தன்னுடைய தளபதிகளை ஒரு பெரும் விருந்திற்கு அழைத்திருந்தார். குறிப்பிட்ட நேரம் நெருங்கிவிட்டது. ஆனால், அவர்கள் யாருமே அந்த விருந்திற்கு வரவில்லை. இதனால் குறிப்பிட்ட நேரத்தில் தனியாகவே அமர்ந்து உணவை உண்ண ஆரம்பித்து விட்டார் நெப்போலியன் பொனபார்ட்.

அவர் உணவருந்தி முடிவடையும் தருவாயில், தளபதிகள் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருந்தார்கள். உடனே நெப்போலியன் சாப்பாட்டு மேசையைவிட்டு எழுந்து நடந்து கொண்டே, "என்னருமை தளபதிகளே! சாப்பிடும் நேரம் முடிந்து விட்டது. இப்பொழுது வேலை செய்யும் நேரம் தொடங்கிவிட்டது!! வாருங்கள், நாம் ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காமல் காரியத்தில் ஈடுபடுவோம்!!" என்றார். இதைக் கேட்டு, பதில் எதுவும் கூற முடியாத தளபதிகள் தங்கள் வெறும் வயிற்றைத் தடவிக் கொண்டே பசியோடு, "காலம் கடந்து வந்ததால் கிடைத்த பலனே இது" என்று கூறியவாறு நெப்போலியனைப் பின்தொடர்ந்தார்கள்.

**அன்பளிப்பு ரூ. 10.00**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org